**செய்தி வெளியீடு எண்: 707** **நாள்: 04.10.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் **3.10.2018** அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், **18.9.2018** அன்று புதுடில்லியில் நடைபெற்ற விழாவில், தேசிய அளவிலான தூய்மைப் பள்ளிக்கான விருதிற்கு தமிழ்நாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆறு பள்ளிகளுக்கு மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட தேசிய தூய்மைப் பள்ளி விருதுகளையும், தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு தேசிய தூய்மைப் பள்ளி விருதுகள் பெற்ற மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பெற்றதற்காக வழங்கிய சான்றிதழையும் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுலின்படி **2014–**ஆம் ஆண்டு முதல் "தூய்மையான பாரதம் தூய்மையான பள்ளி" என்ற திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், **2017–18**ஆம் ஆண்டிற்கான தூய்மை பள்ளிக்கான தேசிய அளவிலான விருது வழங்கும் விழா **18.9.2018** அன்று புதுடில்லியில் நடைபெற்றது. இவ்விழாவில், தேசிய அளவிலான தூய்மைப் பள்ளிக்கான விருதிற்கு தமிழ்நாட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கரூர் மாவட்டம், தாந்தோணி வட்டாரத்திலுள்ள டி.செல்லாண்டிப்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி, தேனி மாவட்டம், மயிலாடும்பாறை வட்டாரத்திலுள்ள கொம்பைதொழு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டாரத்திலுள்ள எம். ஆலம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் வட்டாரத்திலுள்ள அரியப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரத்திலுள்ள இ.ஆவாரம்பட்டி அரசு கேஆர். உயர்நிலைப் பள்ளி, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரத்திலுள்ள சிலுவைசேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய ஆறு பள்ளிகளுக்கு மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தேசிய அளவிலான தூய்மைப் பள்ளிக்கான விருதுகளை வழங்கினார்கள். மேலும், தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு தேசிய தூய்மைப் பள்ளி விருதுகள்

பெற்ற மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பெற்றதற்கான சான்றிதழையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலின் அடிப்படையில், வரும் கல்வி ஆண்டில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரையிலும், 6 முதல் 8–ஆம் வகுப்பு வரையிலும் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு புதிய வண்ணச் சீருடைகள் மாற்றி அமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட புதிய பள்ளி சீருடைகளை அணிந்து வந்த அரசுப் பள்ளி மாணவ, மாணவிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை சந்தித்தார்கள்.

மேலும், பள்ளிக்கல்வித் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 42 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, அவர்களது கல்வித் தகுதி மற்றும் பதிவு மூப்பு அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 7 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் திரு. இரா. சுடலைக்கண்ணன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.10.2018**